**சுற்றாடல் அமைச்சு**

# மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA)

**CEA/AD/Gen/21/2025**

# 2026ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு 2026ஆம் வருடத்திற்கான பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்கு வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு கீர்த்தி வாய்ந்த வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேவைப்பாடுகளின் பிரகாரம், பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பட்டியலிலிருந்தே மத்திய சுற்றாடல் அதிகார சபை விலைகளை அழைக்கும்.

2026ஆம் வருடத்தில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக ஒவ்வொரு வகுதிகளுக்கும் (பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள்) மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500.00 ரூபாவை CEA காசாளருக்குச் செலுத்துதல் வேண்டும் அல்லது இலங்கை வங்கி, பெலவத்த கிளையில் பேணப்படும் 0002937303 எனும் கணக்கிலக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு உருப்படிகளின் மீதான கொடுப்பனவிற்காகவும் பயன்படுத்தப்பட்ட பணப் பற்றுச்சீட்டு / வங்கி வைப்பு பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

2025-11-24ஆம் திகதி முதல் 2025-12-21ஆம் திகதி வரையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணையதளத்தின் (www.cea.lk) ˙ ‘‘பெறுகை அறிவித்தல்’’ - வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2026 ஊடாக வழங்குநர் பதிவு வகை விபரங்கள், விண்ணப்பப்படிவங்கள், வழிகாட்டிகளை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்த சகல விண்ணப்பப்படிவங்களையும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ், வெட் பதிவுச் சான்றிதழ், ஏற்புடையதாகவிருந்தால் CIDA பதிவுச் சான்றிதழ் மற்றும் தேசிய சுவடிகள் பதிவுச் சான்றிதழை இணைத்து 2025-12-21ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு நேரில் ஒப்படைக்க வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2026’’ எனும் வசனத்தை தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பணிப்பாளர் (நிர்வாகம்),**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**‘‘பரிசர பியச’’,**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2872278, 011-2124623**

2025-11-24ஆம் திகதி.